பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 22 புதன்கிழமை 06.07.2022 கதிர் 134

## சஜித்தின் குற்றச்சாட்டையடுத்து

# பதவி விலகினார் அமைச்சர் நிமல்!

## உடனடி விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு



**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பதவியில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளார்.**

**விமான சேவைகள் அமைச்சுக்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கும் இடையில் இடம்பெற்ற கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்வைத்தகுற்றச்சாட்டுக்கள்தொடர்பில் உடனடிவிசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ள நிலையிலேயே அவர் பதவி விலகியுள்ளார்.**

☞2

## நிதி அமைச்சுப் பதவியிலிருந்து உடனே விலக வேண்டும் ரணில்

### தம்மிக்க பெரேரா வலியுறுத்து

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சுப் பதவியை உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞2

## கோட்டா மாளிகை முற்றுகை; ஹிருணிகா குழுவினர் கைது

### எதிர்ப்புப் போராட்டத்தையடுத்து பொலிஸ் பிணையில் விடுவிப்பு





கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச் சந்திர உள்ளிட்ட 11 பேர்

☞2

## ஆஸி. செல்ல முற்பட்ட 45 பேர் திருமலைக் கடலில் சிக்கினர்



சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 45 பேரை இலங்கைக் கடற்படையினர் இன்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

திருகோணமலை - குச்சவெளி கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

☞2

## எரிபொருள் நிரப்பு நிலையம் மீது போத்தல், கல் வீச்சுத் தாக்குதல்!

### பொலிஸ் அதிகாரி காயம்; 13 பேர் கைது

வெல்லவாய நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்த எரிபொருள் தீர்ந்துபோய்விட்டதுஎனத்தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அங்கு வரிசையில் காத்திருந்த சிலர் போத்தல் மற்றும் கற்களை வீசித் தாக்கினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் 20 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## சுனில் ரத்நாயக்காவுக்கு எதிரான மனு விசாரணை ஓக. 4 இற்கு ஒத்திவைப்பு

மிருசுவிலில் எட்டு அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கனிஷ்ட அதிகாரியான சுனில் ரத்நாயக்காவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு அளித்து விடுவித்தமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

☞2

## வடமராட்சியிலும் நால்வர் கைது



யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமானாறுப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாகப் படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 4 பேர் இன்று அதிகாலை ஒரு மணியளவில் கைதுசெய்யப்பட்டனர்.

☞2

# புதிய திரிவு கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம்

### 4 தடுப்பூசிகளும் கட்டாயம் என்று அசேல அறிவுறுத்து

புதிய திரிபு கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம் உள்ளதால், 4 தடுப்பூசிகளையும் உரிய வகையில் செலுத்திக்கொள்வதே, அதிலிருந்து விடுபடுவதற்கான சிறந்த வழியாகும்.

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தடுப்பூசியை சகல அரச வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் மற்றும் பெயரிடப்பட்டுள்ள தடுப்பூசி மையங்களிலும் செலுத்திக்கொள்ள முடியும்.

கொரோனா 4ஆம் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்வதன் ஊடாக வைரஸ் தொற்றின் பாதிப்பைக் குறைத்துக்கொள்ள முடியும் என்பதுடன், மரணம் ஏற்படும் அபாயத்திலிருந்து விடுபடவும் முடியும் - என்றார்.



## இந்தியா செல்ல முயன்ற 9 பேர் மன்னாரில் கைது!



மன்னார் - தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் உள்ளடங்கலாக 9 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞2

## இலங்கை அகதிகளைப் பாதுகாப்பாக மீட்க தனுஷ்கோடியில் படகுகளை நிறுத்துங்கள்

### கரையோரப் பொலிஸாரிடம் இந்திய மீனவர்கள் வேண்டுகோள்

இலங்கையிலிருந்து வரும் அகதிகளைப் பாதுகாப்பாக மீட்க தனுஷ்கோடியில் கரையோரப் பொலிஸாரின் ரோந்துப் படகுகளை நிறுத்த வேண்டும் என இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியால் அகதிகளாக வரும் பெரும்பாலானோர் தனுஷ்கோடி அருகேஉள்ளமணல்திட்டைகளில் இறங்குகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கரையோரப் பொலிஸாருக்குச் சொந்தமான படகுகள், தனுஷ்கோடியில்

☞2

## சீமெந்து விலை மீண்டும் உயர்வு

50 கிலோகிராம் எடையுடைய சீமெந்து 200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என சீமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சீமெந்து மூடை ஒன்றின் புதிய விலை 3 ஆயிரத்து 200 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருட காலத்துக்கு முன்னர் 50 கிலோகிராம் சீமெந்து மூடை 900 ரூபாவாகக் காணப்பட்டபோதிலும், இந்த ஒரு வருட காலப்பகுதிக்குள்

☞2

## வடமராட்சியிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரால் இவர்கள் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த இருவரும், திருகோணமலையைச் சேர்ந்த இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தொண்டமானாறு இராணுவச் சோதனைச்சாவடிக்கு அருகில், அதிகாலையில் நடமாடிய நால்வரையும் இராணுவத்தினர் விசாரணை நடத்தியபோதே அவர்கள் படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்தப் படகுப் பயணத்துக்காக முதல் கட்டமாக ஒவ்வொருவரும் தலா 3 இலட்சம் ரூபாவீதம் பணம் செலுத்தியுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## ஆஸி. செல்ல முற்பட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட 45 பேரில் 25 பேர் 20 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

கைதான அனைவரும் விசாரணைகளுக்காகக் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பதவி விலகினார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் முடியும் வரை ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பதவியில் இருந்து தற்காலிகமாக விலகுவதற்கு நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## கோட்டா மாளிகை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இன்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குப் போகுமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அங்கிருந்த பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி அந்தப் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஒன்றுசேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் போராட்டக்காரர்கள் நுழைய முற்பட்டபோது பொலிஸார் அவர்களை நோக்கி நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைத் தாக்குதலை நடத்தினர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலைமை நிலவியது.

பொலிஸாரின் கண்ணீர்ப் புகைத் தாக்குதலால் அந்தப் பகுதியில் வீதியில் செல்லும் வாகனங்களில் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

கைதுசெய்யப்பட்ட ஹிருணிகா உள்ளிட்ட 11 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டிருந்த போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை, ஹிருணிகா பிரேமச்சந்திர குழுவினர் கைதுசெய்யப்பட்டதும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உடனடியாக அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்க முன்வந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் சட்டத்தரணிகளுடன் நேரடியாகப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தேவையான சட்ட உதவிகளை மேற்கொண்டனர்.

## இந்தியா செல்ல .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு 9.35 மணியளவில் தாழ்வுபாடு கடற்கரைப் பகுதியில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியா மற்றும் பதுளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒரு பெண், ஒரு சிறுவன், ஒரு சிறுமி உள்ளடங்கலாக 7 பேரும், மன்னாரைச் சேர்ந்த 2 படகோட்டிகளும் அடங்குகின்றனர்.

இவர்கள் கடற்படையினரால் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் 9 பேரும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## இலங்கை அகதிகளைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோந்து செல்லவும், இலங்கையிலிருந்து வரும் அகதிகளைப் பாதுகாப்பாக மீட்கவும் தனுஷ்கோடி இறங்குதளத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று 'தஹிந்து' செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் இந்தியாவில் தஞ்சமடைபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளது.

## நிதி அமைச்சுப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டொலர்களை உள்ளீர்ப்பதற்கான உரிய வேலைத்திட்டம் ரணிலிடம் இல்லை. நிதி அமைச்சராக அவர் முன்னெடுக்கும் 'அரசியல் கேம்' நிறுத்தப்பட வேண்டும்.

டொலர்களைத் திரட்டுவதற்கான வழிமுறைகளை ரணில் தடுத்து வருகின்றார். நாட்டு மக்களைப் பட்டினியில் இருந்து மீட்பதற்கான திட்டமும் அவரிடம் இல்லை.

எனவே, பிரச்சினைகளுக்கு மத்தியில் பயணிக்காமல், நிதி அமைச்சுப் பதவியை ரணில் விக்கிரமசிங்க துறக்க வேண்டும் - என்றார்.

அதேவேளை, எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டமானது, நாட்டுக்கு டொலர்களைத் திரட்டுவதற்கான வழிமுறைகளைக் காண்பிக்கும் போராட்டமாக அமைய வேண்டும் எனவும் அவர் யோசனை முன்வைத்தார்.

## சீமெந்து விலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீமெந்து மூடையின் விலை 6 சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள்களின் விலையேற்றம் ஆகியன காரணமாக சீமெந்து மூடைகளைப் பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்வதில் பாரிய அசௌகரியங்களையும், போக்குவரத்துப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருவதாக சிமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.

சீமெந்து விலையேற்றம் காரணமாக வீடுகள், கட்டடங்கள் நிர்மாணத் துறையில் ஈடுபடுவோரும் தமது தொழிற்துறையில் பாரிய பின்னடைவை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுனில் ரத்நாயக்காவுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் யஸந்த கோட்டாகொட, தெஹிதெனிய ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன்னால் இந்த அடிப்படை உரிமைமீறல் மனு இன்று பரிசீலிக்கப்படஇருந்தது.

நீதிமன்றம் இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் இன்று முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

இன்று மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தனின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மன்றில் முன்னிலையானார். எனினும், எதிராளியான சுனில் ரத்நாயக்கா சார்பான சட்டத்தரணி இன்று மன்றில் முன்னிலையாகாத காரணத்தால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் எதிர்வரும் ஒகஸ்ட் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்-
076 443 8622






நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாதுகாப்பு முக்கியம்

'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும்' – எந்த விடயத்திலும் உயிர்ப் பாதுகாப்பு முக்கியம். அடுத்ததுதான் பிற விடயங்கள்.

அதுவும் இந்த நெருக்கடி சமயத்தில் – மருந்துப் பொருள்கள், உபகரணங்கள் பற்றாக்குறையினால் சுகாதார – மருத்துவ சேவைகள் முடங்கும் தறுவாயில் – உயிராபத்து தரும் சாகசங்களை இயன்ற வரைத் தவிர்த்துக் கொள்வது மிக முக்கியம். உயிராபத்து விடயங்களில் வருமுன் காப்பது எப்போதும் சிறந்த வழிமுறை. வந்த பின் வேதனைப்படுவதில் அர்த்தமில்லை.

எரிபொருள் பற்றாக்குறையால் மக்களுக்குப் போக்குவரத்து நெருக்கடி உச்சம். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறும் பொதுப் போக்குவரத்தை உச்சமாகப் பயன்படுத்த வேண்டிய இக்கட்டு மக்களுக்கு. வேறு வழி இல்லை. இதனால் ரயில்கள், பஸ்களில் அதிக எண்ணிக்கையில் மக்கள் தொற்றிக் கொண்டும், தொங்கிக் கொண்டும் பயணிக்கும் அவலம். எந்நேரமும் பேரனர்த்தம் நிகழக் கூடிய ஆபத்து நிலை.

வவுனியாவில் அளவுக்கு மீறிப் பயணிகள் ஏறியமையால் – பஸ்ஸில் தொங்கிக் கொண்டமையால் – வேறு வழி ஏதுமின்றி, பஸ்ஸை இடைவெளியில் நிறுத்த வேண்டிய இக்கட்டு ஒரு சாரதிக்கு. அதற்காக அந்தப் பயணிகளின் திட்டல்கள், வசவுக்கு அந்தச் சாரதி உள்ளாகி இருக்கக் கூடும். ஆனாலும், அவரின் பொறுப்புணர்வு மதிக்கத்தக்கது; பாராட்டப்பட வேண்டியது. ஏதும் பேரனர்த்தம் நிகழ்ந்தால் அவரும் நடத்துநரும் தான் பதில் கூற வேண்டியிருக்கும்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் யாழ் நகரில் இருந்து காரைநகருக்குத் தனியார் பஸ் ஒன்றின் சேவை நடந்தது. அன்று இரவு அதுதான் கடைசி பஸ். உள்ளேயும் வாசலிலும், ஜன்னலிலும் தொங்கும் கூட்டத்துக்கு மேலதிகமாக பஸ்ஸுக்கு மேல் 'ஹுட் கரியர்' (மேற்புற சுமை தாங்கி) பொருத்தப்படாத மட்டமான மேற்தட்டின் மீது கணிசமான எண்ணிக்கையான இளைஞர்கள் கூட்டம். பாரம் தாங்காமல் மேல்தட்டே உள்ளிருக்கும் பயணிகள் மீது பாறி நசித்து விடும் ஆபத்தும் உண்டு. சாரதி எவ்வளவு கெஞ்சியும் இறங்குவார் இல்லை. வேறுவழியின்றிமெல்லமெல்லபஸ்ஸைப்பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்த்தார் சாரதி.

ரயில் பெட்டிகளின் கூரையில், கதவில், இரண்டு பெட்டிகளுக்கு இடைப்பட்ட இணைப்புகளின் வெளிப்புற இடையில் எனப் பல நூற்றுக்கணக்கானோர் தொங்கிக்கொண்டு பயணிக்கும் அவலக் காட்சியை முன்னர் சில வெளிநாட்டுச் செய்திகளில் ஆச்சரியத்துடன் பார்த்திருந்தோம். அது இப்போது தென்னிலங்கையில் சர்வசாதாரணம்.

இந்தச் சீத்துவத்தில், தங்களின் சொந்தப் பாவனைக்கு எரிபொருள் தரவில்லை என்ற சீற்றத்தில் எதிர்ப்பைக் காட்ட ரயில்வே ஊழியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, 'உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்' என்ற மாதிரி, இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவையையும் மேலும் நெருக்குவாரத்துக்குள் மூழ்கடித்து இருக்கின்றனர்.

பயணிகள் பேராபத்துக்குள்ளாகும் விடயம் தொடர்பில் அதைத் தடுப்பதற்கு புதிய நடவடிக்கைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் கூறுகின்றார். வெறுமனே, அதிக பயணிகளை ஏற அனுமதிக்காதீர்கள் என்று சாரதிகளுக்கும் ரயில் நிலைய அதிபர்களுக்கும் எழுத்தில் உத்தரவு கொடுப்பது சரியானதும் அல்ல, சாத்தியமானதும் அல்ல. பயணிகள் அதிகம் முண்டியடிக்கும்சேவைகளை,அவற்றுக்குரியநேரவிவரங்களுடன் அடையாளம் கண்டு, அச்சமயங்களில் இயலுமான வரை அந்தப் பாதையில் – தடத்தில் –அதிக சேவைகளை முன்னெடுப்பதுதான் முதலாவது தீர்வாக இருக்க முடியும். அன்றாட வாழ்வியலுக்காக மக்கள் பயணிக்கவும் வேண்டும், அதேசமயம் அது பாதுகாப்பான பயணமாக இருக்கவும் வேண்டும். எப்படித் தீர்வு காணப் போகிறார்களோ தெரியவில்லை.

# காலால் உதைத்தது உண்மையே ஆனால் அவர் மீது அதுபடவில்லை!

## இராணுவ அதிகாரி கூறுகிறார்



குருணாகல் – யக்கஹபிட்டியஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தான் நபர் ஒருவர் மீது காலால் உதைத்து தாக்கிய போதும் அது அந்த நபர் மீது படவில்லை என குருணாகல் நகரபகுதியின் இராணுவலெப்டினன் கேர்ணல் தர கட்டளை அதிகாரியான விராஜ் குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் வீடியோ காணொலி தொடர்பில் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தான் குருணாகல் பகுதியில் சேவையாற்றும் நற்பெயர் மிக்க இராணுவ அதிகாரி என்றும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே பாதாள உலகக் கோஷ்டியினர் ஒன்று கூடியுள்ளனர் எனக் கிடைத்த தகவலுக்கு அமையவே தாம் அங்கு சென்றேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

தான் காலால் உதைத்தது உண்மையே எனக் குறிப்பிட்ட அவர், எனினும் தனது கால் அவரது உடம்பில் படவில்லை எனவும் மேற்படி நபரிடமே அது தொடர்பில் கேட்டுப்பார்க்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த இராணுவ அதிகாரி தொடர்பில் நிறுவன மட்டத்திலான உடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் பரவும் ஒமிக்ரோனின் பிறழ்வு இலங்கையிலும் பரவுமா?

## வைத்தியர் விளக்கம்

இந்தியாவில் பரவும் ஒமிக்ரோனின் புதிய பிறழ்வு தொடர்பாக ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர விளக்கமளித்துள்ளார்.

உலகின் 63 நாடுகளில் பரவி வரும் இ-டு-செவன்-பைவ் என்ற ஒமிக்ரோன் துணை வகை தற்போது இந்தியாவிலும் பரவி வருகிறது. அந்நாட்டில் பல நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த திரிவு தொடர்பாகப் பயப்படத்தேவையில்லை என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

# பஸ்ஸில் அளவுக்கு மீறிப் பயணிகள் அதனால் இறங்கிச் சென்றார் சாரதி

## வவுனியா – செட்டிகுளம் பாதையில் நெருக்கடி




வவுனியாவில் இருந்து பூவரசன்குளம் ஊடாக செட்டிகுளம் சென்ற இ.போ.சபைக்கு சொந்தமான பஸ்ஸில் அதிக சனநெரிசல் ஏற்பட்டு பஸ்ஸில் பலர் தொங்கிக் கொண்டு பயணித்தமையால் பஸ்ஸை இடைநடுவே நிறுத்து விட்டு சாரதி இறங்கிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை 6.00 மணியளவில் வவுனியாவில் இருந்து புறப்பட்ட பஸ் மாலை 6.40 மணியளவில் பட்டாணிச்சூர் பகுதியை அடைந்த போதே சாரதி வாகனத்தை செலுத்த முடியாது எனத் தெரிவித்து பஸ்ஸில் இருந்து இறங்கிச் சென்றார்.அது குறித்து இ.போ. சபை முகாமையாளருக்கும் தெரியப்படுத்தியிருந்தார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக வவுனியா – செட்டிகுளம் வரையிலான போக்குவரத்தை தனியார் பஸ்கள் இடைநிறுத்தியுள்ளன. இ.போ.சபை பஸ்ஸின் சேவையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியாவில் இருந்து பூவசரன்குளம் ஊடாக பயணித்த நேற்றைய இறுதி பஸ்ஸில் வவுனியா நகரில் கற்றல் செயற்பாடுகளுக்கு வந்தோர், வேலைக்கு வந்தோர், தேவை கருதி வந்தோர் எனப் பலரும் செட்டிகுளம் திரும்பிச் செல்லக் காத்திருந்தனர். வவுனியா பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்ட இ.போ.சபை பஸ் இலுப்பையடியை அடைந்த போது பஸ்ஸுக்குள் நெரிசல் ஏற்பட்டது. இதனையடுத்து பஸ் மன்னார் வீதி, குருமன்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பஸ்ஸில் தரிப்பிடங்களில் நிறுத்திப் பயணிகளை ஏற்றிய போது பஸ்ஸில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. இளைஞர்கள் பலரும் இடம் இன்மையால் பஸ்ஸின் பின்புறத்திலும் வாயில் பகுதியிலும் தொங்கியபடி பயணித்தனர். தொடர்ந்து சென்ற பஸ் பட்டாணிச்சூர் பகுதியை அடைந்த போது அங்கும் மக்கள் நின்றமையால் ஏற்ற முடியாது எனத் தெரிவித்தும், பஸ்ஸில் பாதுகாப்பற்ற வகையில் பயணிகளை கொண்டு செல்ல முடியாது எனத் தெரிவித்தும் சாரதி பஸ்ஸில் இருந்து இறங்கி சென்றிருந்தார். இது குறித்து சாலை முகாமையாளருக்கும் அவர் தெரியப்படுத்தியிருந்தார். இதனால் அந்த பஸ்ஸில் பயணித்த பலரும் வீடு செல்ல முடியாது இரவு வேளை யில் அந்தரித்துக் கொண்டிருந்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற ஊடகவியலாளர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து இது குறித்து சாலை முகாமையாளருக்கு தெரியப்படுத்தியமையையடுத்து இ.போ.சபையின் வவுனியா சாலையில் இருந்து பிறிதொரு பஸ் அனுப்பி வைக்கப்பட்டது. இதனையடுத்து சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு பின்னர் இரண்டு இ.போ.சபை பஸ்களிலும் மக்கள் ஏறி புறப்பட்டுச் சென்றனர்.

# ஏமனின் ஆயுத சேமிப்பு கிடங்கில் வெடி விபத்து; 10 பேர் உயிரிழப்பு



ஏமன் நாட்டில் ராணுவ ஆயுத சேமிப்பு கிடங்கில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். அப்யன் மாகாணம் லவ்டர் என்ற நகரத்தில் ஏமன் ராணுவத்திற்கு சொந்தமான ஆயுத கிடங்கு உள்ளது.

இதில் நேற்று மாலை பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. சேமித்து வைக்கப்பட்டு இருந்த ஆயுதங்கள் வெடித்துச் சிதறியதால் பல கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த கட்டிடங்களும் அதிர்ந்தன என மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த வெடி விபத்தில் அரசுப் படையினர் 10 பேர் உயிரிழந்தனர்.

அருகில் உள்ள பல்வேறு வீடுகளும் வெடி விபத்தால் இடிந்து விழுந்துள்ளன. இதில் படுகாயம் அடைந்த 45 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த வெடி விபத்து தற்செயலாக ஏற்பட்டதா அல்லது திட்டமிட்ட சதியா என ஏமன் ராணுவ அதிகாரிகள் தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர். ஏமன் நாட்டில் அரசுப் படையினருக்கும் ஹவுதி கிளர்ச்சியா ளர்களுக்கும் இடையே பல ஆண்டுகளாக அவ்வப்போது கடும் சண்டை நடைபெற்று வருகிறது. ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான், ரஷ்யாவும்; ஏமன் ராணுவத்திற்கு சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளும் ஆதரவளிக்கின்றன.

## இங்கிலாந்து நாட்டுக்கு புதிய நிதி அமைச்சர் நியமனம்



இங்கிலாந்தில் போரிஸ் ஜான்சன் தலைமையிலான பழமைவாத கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது.

அந்தக் கட்சியின் துணை கொற டாவாக எம்.பி. கிறிஸ் பின்ர் செயல்பட்டு வந்தார். கடந்த புதன்கிழமை இரவுநேர கேளிக்கை விடுதியில் இரு ஆண்களிடம் பாலியல் ரீதியில் அநாகரிகமாக செயல்பட்டதாக கிறிஸ் மீது குற்றச் சாட்டு எழுந்தது. இதையடுத்து கிறிஸ் கட்சியின் துணை கொறடா பதவியில் இருந்து ராஜினாமா செய்தார். தொடர்ந்து பழமைவாத கட்சி எம்.பி. பதவியில் இருந்து கிறிஸ் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

ஆனாலும் கிறிஸ் மீது பிரதமர் போரிஸ் ஜான்சன் சரியான நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கிடையே, இங்கிலாந்து நிதி மந்திரி ரிஷி சுனக், சுகாதாரத்துறை மந்திரி சஜித் ஜாவித் ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துள்ளனர். இந்நிலையில், இங்கிலாந்தின் நதீம் சஹாவி நிதி மந்திரியாகவும், ஸ்டீவ் பார்க்லே சுகாதார மந்திரியாகவும் செயல்படுவார் என பிரதமர் போரிஸ் ஜான்சன் அறிவித்தார்.

## வெளிநாட்டு சதி என்று இம்ரான் கான் குறிப்பிடுவது மிகப்பெரிய நாடகம்

### மரியம் நவாஸ் குற்றச்சாட்டு



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், வெளிநாட்டு சதி என்ற பெயரில் பாகிஸ்தான் வரலாற்றில் மிகப்பெரிய நாடகத்தை அரங்கேற்றினார் என்று ஆளுங்கட்சியான பி.எம்.எல்.என் துணைத் தலைவர் மரியம் நவாஸ் கூறியுள்ளார். பாகிஸ்தானின் பஞ்சாப் சட்டசபையில் காலியாக உள்ள 20 இடங்களுக்கு ஜூலை 17ம் திகதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் இம்ரான் கானும் இடைத்தேர்தலுக்காக பிரச்சாரம் செய்து வருகிறார். அவர் அடிக்கடி தற்போதைய அரசாங்கத்தை வெளிநாட்டினரால் இறக்குமதி செய்யப்பட்டது என்று குற்றம் சாட்டி வருகிறார். மேலும், அமெரிக்கா இந்த அரசாங்கத்தை சதி வேலைகளால் திணித்ததாகவும் குற்றம் சாட்டினார். இதற்கு பதிலளிக்கும் விதமாக, லாகூரில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசிய மரியம் நவாஸ், இம்ரான் கான் மீது குற்றம் சாட்டினார். அவர் கூறியதாவது, இம்ரான் கான் பஞ்சாப் மாகாணத்தை புறக்கணித்தார்.

இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபி மற்றும் அவரது கும்பல் ஆட்சி, பஞ்சாப் மாகாணத்தின் வளங்களை கொள்ளையடித்தது. இம்ரான் கான் கட்சியான பி.டி.ஐ. ஆட்சிக் காலத்தில், பஞ்சாப் அனாதை போல் இருந்தது. ஆனால் இப்போது சிங்கம் பிரதமராக மீண்டும் வந்துவிட்டது, ஆகவே பஞ்சாப் முன்பு போல் முன்னேறும். பாகிஸ்தானின் வரலாற்றில் மிகப்பெரிய ஊழல்கள் பிடிஐ ஆட்சியின் போது நடந்தன. துரதிர்ஷ்டவசமாக, பாகிஸ்தானிய அரசியலில் மிகப்பெரிய பொய்யர், குழப்பவாதி மற்றும் ஏமாற்றுக்காரர் ஒருவர் பிரதமரானார். நாட்டு மக் களை அமெரிக்கா அடிமைகளாக வைத்திருக்கிறது என்று அவர் மக்களிடம் அடிக்கடி பொய் கூறுவார். இப்படி அவர் தனது சதி வார்த்தைகளில் மக்களை பிஸியாக வைத்திருந்தார். வெளிநாட்டு சதியால் தன்னுடைய அரசாங்கம் கவிழ்ந்தது என்று இம்ரான் கான் கூறி வருவது, பாகிஸ்தான் வரலாற்றில் மிகப்பெரிய நாடகம். இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.489 கோடி செலவில் ஈபிள் கோபுரம் வர்ணம்

*பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் உலகப்புகழ் பெற்ற ஈபிள் கோபுரம் அமைந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குஸ்டாவ் ஈபிள் என்பவரால் கட்டப்பட்ட முற்றிலும் இரும்பினாலான இந்த கோபுரம் 1,063 அடி உயரம் கொண்டதாகும்.*

*உலகில் அதிகம் பார்வையிடப்பட்ட சுற்றுலா தளங்களில் ஒன்றாக இந்த ஈபிள் கோபுரம் விளங்குகிறது. இந்த நிலையில் ஈபிள் கோபுரம் துருப்பிடித்து மோசமான நிலையில் இருப்பதாகவும், முழுமையான பழுதுபார்ப்பு தேவை என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.*

*ஆனால் பழுதுபார்ப்புக்கு பதிலாக ஈபிள் கோபுரம் வெறுமென வர்ணம் பூசப்படுவதாகவும் நிபுணர்கள் ரகசிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். 2024ம் ஆண்டு பாரீசில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டியையொட்டி 60 மில்லியன் யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.489 கோடி) செலவில் ஈபிள் கோபுரம் வர்ணம் பூசப்பட்டு வருவதாகவும், ஈபிள் கோபுரத்தில் இப்படி மீண்டும் வர்ணம் பூசப்படுவது இது 20வது முறை என்றும் நிபுணர்களின் ரகசிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஈபிள் கோபுரத்தை பராமரித்து வரும் தனியார் நிறுவனம் இது குறித்து உடனடியாக எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.*





# சென்னையில் முகக்கவசம் அணியாவிட்டால் இன்று முதல் 500 ரூபா அபராதம் விதிப்பு!



சென்னையில் மக்கள் அதிகம் கூடுமிடங்களில் முகக்கவசம் அணியாத நபர்களுக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது. தமிழகத்திலும் அண்மைய நாள்களில் கொரோனாப் பரவல் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப் படுத்த மாநகராட்சியின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மாநகராட்சியின் சார்பில் தடுப்பூசி முகாம்கள் மற்றும் தீவிர கொவிட் தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த இரு வாரங்களாக கொரோனாத் தொற்றுப் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே, பொதுமக்கள் சந்தைப் பகுதிகள், அங்காடிகள், வணிக வளாகங்கள் திரை யரங்கங்கள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள், மருத்துவமனைகள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்குச் செல்லும்போது தவறாமல் முகக்கவசம் அணியவும், சமூக இடைவெளியைப் பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வணிக நிறுவனங்கள் தங்களுடைய அங்காடிகளில் ஒரே நேரத்தில் அதிகமானோர் கூடுவதைத் தவிர்த்து, சமூக இடைவெளியைப் பின்பற்றி பொதுமக்களை அனுமதிக்க வேண்டும். மேலும் வணிக வளாகங்கள், திரையரங்கங்கள் துணிக் கடைகள் போன்ற வணிக நிறுவனங்களின் ஊழியர்களும் வாடிக்கையாளர்களும் முகக்கவசம் அணிவதை அந்தந்த நிறுவனமே உறுதி செய்ய வேண்டும்.

குறித்த இடங்களில் ஆய்வு மேற்கொள்ள மாநகராட்சியின் சார்பில் அந்தந்த பகுதிக்குட்பட்ட சுகாதார ஆய்வாளர்கள் தலைமையில் குழுக்கள் அமைக் கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களின் ஆய்வின்போது முகக்கவசம் அணியாத நபர்களுக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்படும், என்று சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் மூன்றாவது முறையாக ஒத்தி வைப்பு





காவிரியின் குறுக்கே கர்நாடகா அரசு மேகதாது அணை கட்டுவது குறித்து காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் விவாதிக்க எதிர்ப்புத் தெரிவித்து தமிழக அரசின் சார்பில் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேகதாது அணை பற்றி விவாதிக் கக்கூடாது என்று வலியுறுத்தி, மத்திய அரசுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதமும் எழுதியிருந்தார்.

தமிழக அரசின் எதிர்ப்பு நிலை காரணமாக ஏற்கனவே ஜூன் 17, 23 திகதிகளில் நடைபெறவிருந்த காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இன்று நடைபெறவிருந்த காவிரி மேலாண்மை ஆணையத்தின் 16 ஆவது கூட்டம் ஒத்தி வைக்கப்படுவதாக காவிரி மேலாண்மை ஆணையம் நேற்று தெரிவித்திருந்தது

## எம்.ஜி.ஆர். உருவாக்கிய அ.தி.மு.கவின் சட்ட விதிகளில் திருத்தம் செய்ய எந்தத் தொண்டரும் விரும்பவில்லை!

### சசிகலா உறுதிபடத் தெரிவிப்பு



விழுப்புரம் மாவட்டம் மன்னார்சாமி கோயில் அருகே நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட சசிகலா, எம்.ஜி.ஆர். உருவாக்கிய அ.தி.மு.கவை நாட்டின் மூன்றாவது பெரிய கட்சியாக மாற்றியவர் ஜெயலலிதா. பசுத்தோல் போர்த்திய புலிகளின் கையில் சிக்கி அ.தி.மு.க. சின்னாபின்னமாகி வருகிறது, என்று தெரிவித்திருக்கிறார்.

உள்ளாட்சி இடைத்தேர்தலில் இரட்டை இலை இல்லாமல் போட்டியிட யார் அதிகாரம் கொடுத்தது?, என்று கேள்வியெழுப்பிய சசிகலா, தனிப்பட்ட ஒரு சிலரின் சுயநலத்தால் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட முடியாத சூழ் நிலைக்குத் தொண்டர்கள் தள்ளப்பட்டுள்ளனர், என்றும் கூறினார்.

அ.தி.மு.கவில் நடப்பதைப் பார்த்து தி.மு. கவினர் ஆனந்தமாக உள்ளனர். கட்சிக்குள் சிலர் உயர் பதவியில் நீடிப்பதற்காக சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றனர். சொந்த வீட்டிற்கே சூனியம் வைத்து விட்டார்கள். தனிப்பட்டவர்களின் சுய நலத்தால் இரட்டை இலைச் சின்னம் முடங்கியுள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை அவரவர் விருப்பத்திற்கு கட்சியின் சட்ட விதிகளை மாற்ற, யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை. எம்.ஜி.ஆர். உருவாக்கிய அ.தி.மு.கவின் சட்டதிட்டங்களில் திருத்தம் செய்வதை எந்தத் தொண்டரும் விரும்பவில்லை, என்றும் சசிகலா உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

## தற்போதைய ஜி.எஸ்.டி. வரி நடைமுறைக்கு காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி எதிர்ப்பு



இந்தியா முழுவதும் குறைவான அளவிலான ஒற்றை ஜி.எஸ்.டி. வரியை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம்ஏழை, நடுத்தர மக்களுக்கு உதவ முடியும் என காங்கிரஸின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

வைரங்களுக்கு ஒன்றரை சதவீத வரியும், மிகவும் அத்தியாவசியமான ருத்துவக் காப்பீடுகளுக்கு 18 சதவீத வரியும் விதிக்கப்படுவதாகவும் இதன் மூலம் பிரதமர் யார் நலனில் அக்கறை காட்டுகிறார் என்பது தெரியவருவதாகவும் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

ஏழை, நடுத்தர மக்களுக்கு பாதகமாகவும் பணக்காரர்களுக்கு சாதகமாகவும் உள்ள தற்போதைய ஜி.எஸ்.டி. வரி முறையைக் கைவிட வேண்டும் என்றும் ராகுல் காந்தி கூறியுள்ளார். குறைவான அளவில் ஒற்றை ஜி.எஸ்.டி. வரியைக் கொண்டு வருவது மூலமே ஏழை, நடுத்தர மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## தரமற்ற விதை, உரம் விற்றால் கடும் நடவடிக்கை கர்நாடக அமைச்சர் பட்டீல் எச்சரிக்கை



மைசூருக்கு அருகேயுள்ள நாகன ஹள்ளியில் விவசாய ஆராய்ச்சி மைய வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கர்நாடக மாநில விவசாயத்துறை அமைச்சர் பி.சி.பட்டீல் கலந்துகொண்டார்.

நிகழ்வையடுத்து அவர் மைசூரில் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், கர்நாடகத்தில் பல பகுதிகளில் தரமற்ற விதைகளும் உரமும் விற்பனை செய்யப்படுவதாக தனக்கு புகார்கள் வந்துள்ளன என்றும், தரமற்ற பொருள்களை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேலும் தரமற்ற விதை, உரம் விற்பனை செய்யும் கடைகளின் உரிமமும் ரத்து செய்யப்பட்டு, அவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்படும், என்றும் தெரிவித்திருக்கிறார்.

கர்நாடகத்தில், ஆண்டுதோறும் சுமார் 22 ஆயிரம் கோடிக்கு விவசாய உபகரணங்கள், விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனை நடக்கிறது. விவசாயிகளுக்கு தரமான விதை, உரம் கிடைக்காவிட்டால் ஓர் ஆண்டு வீணாகுவதோடு அவர்களுக்கு நஷ்டமும் ஏற்படுகிறது. விவசாயிகள் நம் நாட்டின் முதுகெலும்பு. அவர்களை ஏமாற்றக்கூடாது.

கர்நாடகத்தில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் சுமார் 27 கோடி மதிப்பிலான தரமற்ற விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதனை விற்றவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது. இவற்றில் 26 வழக்குகளில் 15 லட்சம் அபராதமும் வசூலிக் கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு மாநிலத்தில் மொத்தம் 215 கடைகளின் உரிமங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு தரமான விதைகளும் உரங்களும் வழங்க வேண்டும். இதில் அரசு உறுதியாக உள்ளது, என்றும் அமைச்சர் பி.சி.பட்டீல் கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திண்மக்கழிவுகள் அகற்றப்படாமையினால் மட்டு. மக்களுக்குப் பெரும் அசௌகரியம்







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாநகர சபையினரால் திண்மக் கழிவுகளை அகற்றும் சேவை தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டுவந்த நிலையில் தற்போதைய எரி பொருள் தட்டுப்பாடு காரணமாக மட்டக்களப்பு நகர்பகுதி களில் அந்த சேவை இப்போது முன்னரைப் போல் ஒழுங்கான முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை. அதனால் நகர் பகுதி மக்கள் சேரும் திண்மக்கழிவுகளை அகற்றுவதில் தாங்கள் பெரும் அசௌகரியத்தை எதிர் கொண்டுவருகின்றோம் என விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வாரங்களாக மாநகர சபையினரினால் கழிவகற்றல் செயற்பாடுகள் ஒழுங்காக மேற்கொள் ளப்படவில்லை. எனினும் பொதுமக்கள் பொது இடங்க ளில் கழிவுகளை வீசிவருகின்றனர். இதனால் சூழல் மாசுபடுவதுடன் நோய்த்தாக்கங்கள் ஏற்படவும் வாய்ப் புள்ளதாக சூழலியலாளர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

பொதுமக்கள் தமது கழிவுகளை தமது குடியிருப் புக்களின் முன்னால் உள்ள வீதிகளில் மாநகர சபை ஊழியர்கள் வந்து எடுத்து செல்வார்கள் என கருதி வழமை போல அதிகளவு கழிவுகளை வீதிகளில் குவித்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

உரிய அதிகாரிகள் விரைந்து தக்க நடவடிக்கையை மேற்கொண்டு, திண்மக் கழிவுகளை அகற்றுவதன் மூலம் நோய்த்தொற்றற்ற ஆரோக்கியமான மாநகரைப் பேணுவதற்கு வழி செய்ய வேண்டும் என மாநகர மக் கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கல்குடா மாரியம்மன் ஆலய மகோற்சவம்

மட்டக்களப்பு தாந்தாமலை கல்குடா அருள்மிகு ஸ்ரீ முத்துமா ரியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவப் பெருவிழா நாளை வியாழக்கிழமை இரவு திருக்கும்பம் வைத்தல் சடங்குடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ள தீமிதிப்பு மற்றும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இச்சடங்கு உற்சவத்தில் நாளை மறுதினம் 8 ஆம் திகதி வரவாற்றுச் சிறப்புமிக்க தாந்தாமலை முருகன் ஆலயத்திலிருந்து பாற்குடப்பவனியும், 11 ஆம் திகதி பகல் அம்மன் ஊர் சுற்றும் வைபவமும், இரவு தவநிலைச் சடங்கும் இடம்பெறவுள்ளன.

உற்சவ காலக் கிரியைகளை ஆலய பிரதம பூசகர் சிவஸ்ரீ சி.சதா குருக்கள் தலைமையில் சடங்குகால பிரதம பூசகர் சிவஸ்ரீ சா.தவராசா மற்றும் சிவஸ்ரீ வ.கோமகன், கு.கணபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# திருமணத்தில் மாதுளம் கன்று அன்பளிப்பு காரைதீவில் ஒரு முன்மாதிரியான சம்பவம்



(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவில் இன்று காலை நடந்த திருமண நிகழ்வில் ஒரு முன்மாதிரியான நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

காரைதீவு ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற திருமண வைபவத்தின் போது வருகை தந்த அனைவருக்கும் ஒவ்வொரு மாதுளம் கன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மணமக்களால் இந்த மாதுளம் கன்று வழங்கப்பட்டமை ஒரு முன்மாதிரியான செயற்பாடு என்று வருகை தந்தவர்கள் கூறி வாழ்த்தினார்கள்.

பொறியியலாளர் நிதர்ஷன் – பட்டதாரி பிரம்மியா தம்பதிகளின் திருமணத்தின் போது இந்நிகழ்வு இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமப் பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி ராமகிருஷ்ணமிஷனில் வரவேற்பு



(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ். கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி இராம கிருஷ்ண மிஷன் குருகுலத்தில் நேற்று செவ் வாய்க்கிழமை பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த மாதம் நான்காம் திகதி யாழ். செல் வச்சந்நிதி ஆலயத்திலிருந்து சிங்கராஜா ஜெயராஜா தலைமையிலே ஆரம்பமான பாதயாத்திரை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு நேற்று முன்தினத்துடன் ஒரு மாத காலத்தைப் பூர்த்தி செய்கின்றது.

குழுவினர் நேற்று முன்தினம் காலை மட் டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு கல்லடி இராம கிருஷ்ணமிஷன்குருகுலத்தைவந்தடைந்தார்கள்.

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷ யானந்த ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் ஆகியோர் விடுத்த அழைப்பை ஏற்று நேற்று அங்கு அவர்கள் விஜயம் செய்தார்கள்.

மிஷனுக்கான இவ் விஜயம் வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெறுவதால் முக்கியத்து–வம் பெறுகிறது.

யாழ்.கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் நேற்று பகல் கல்லடி இ.கி.மிஷனில் வரவேற்கப் பட்டு, அங்கு பகல் அவர்களுக்கு மதியபோசன விருந்து உபசாரம் அளிக்கப்பட்டது.

அவ்சமயம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் பட்டிப்பளை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சிவ ஞானம் அகிலேஸ்வரன், உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தலைவர் சி.ஜெயராசா தெரிவிக்கையில்..

வரலாற்றில் முதல் தடவையாக மிஷனுக்கு செல்வது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எங்களில் 99 வீதமான வருக்கு மிஷன் பற்றி தெரியாது. இங்கு வந்த பின்பே சுவாமிகளது அன்பான வரவேற்பையும் உபசரிப்பை யும் உணரமுடிந்தது. குருகுல மாண வர்கள் நேரத்திற்கு ஒழுங்குடன் நடப்பதை அவதானிக்க முடிந்தது. ஆகவே ,எங்களை அன்புடன் அழைத்த சுவாமிகளுக்கு நன்றி கூறு கின்றோம். அதற்காக ஒருங்கிணைப்பைச் செய்த எமது ஆலோசகர் சகாதேவராஜா ஜயாவுக்கும் நன்றிகள். இன்னும் இரு தினங்களில் நாங்கள் அம் பாறை மாவட்டத்தை அடைவோம் .

22 ஆம் திகதி உகந்தைமலை முருகன் அருகில் உள்ள காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் அதன் ஊடாக காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றோம். முருகன் அருளால் எதிர்வரும் 28 ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடைய இருக்கின்றோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# எங்களைக் கண்டு இனி எதிரணியினர் பயப்படுவார்கள்! இங்கிலாந்து டெஸ்ட் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ்



எங்களைக் கண்டு இனி எதிரணி பயப்படுவார்கள் என்று இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்திருக்கிறார்.

பெர்மிங்காமில் நடந்த இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான தொடரின் இறுதி டெஸ்டில் 378 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணி, எளிதான வெற்றியைப் பெற்றது.

வீரர்கள் இது போன்று விளையாடும்போது எனது பணி எளிதாகிவிடுகிறது. என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவு இருந்துவிட்டால் இத்தகைய இலக்கை அடைவது எளிது. 5 வாரங்களுக்கு முன்பு 378 ஓட்டங்கள் என்ற இலக்கு அச்சத்தை அளித்திருக்கும். ஆனால் இப்போது எல்லாமே இயலுமானதாக இருக்கிறது. எல்லாப் பெருமையும் பெயர்ஸ்டோ, ஜோ ரூட் இருவரையுமே சாரும்.

இங்கிலாந்து மண்ணில் எப்படி டெஸ்ட் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்பதில் மாற்றத்தைக் கொண்டு வர முயற்சிக்கிறோம். எங்களது வெவ்வேறு விதமான திட்டமிடல் எல்லாம் 5 வாரத்துக்கு முன்பிருந்து தொடங்கியது.

டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு மறுமலர்ச்சியை கொடுக்க விரும்புகிறோம். இது போன்று விளையாடும்போது, டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு புதிய ரசிகர்களைக் கொண்டு வர முடியும் என்று நினைக்கிறேன், என்று பென் ஸ்டோக்ஸ் கூறியிருக்கிறார்.

எங்களது அதிரடியான அணுகுமுறையை கண்டு இனி மூன்றாவது இன்னிங்ஸ்களை விளையாடவுள்ள எதிரணியினர் பயப்படுவார்கள். அதாவது, எவ்வளவு இலக்கு நிர்ணயித்தால் போதுமானதாக இருக்கும்? நாங்கள் நான்காவது இன்னிங்சில் எந்த மாதிரி ஆடுவோம் என்பதில் தெளிவு கிடைக்காமல் அவர்கள் குழம்புவார்கள், என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## இந்திய அணிக்கு 40 சதவீதம் அபராதம் டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் 2 இழப்பு



இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து 7 விக்கெட்களால் அபார வெற்றியைப் பெற்றது. இதன்மூலம் டெஸ்ட் தொடர் 2-2 என சமனிலையில் முடிவடைய இரு அணிகளும் வெற்றிக் கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டன.

இந்த டெஸ்ட் போட்டியில் கொடுக்கப்பட்ட நேரத்துக்குள் ஓவர்களை வீசி முடிக்காத காரணத்தினால், இந்திய அணி வீரர்களின் போட்டி ஊதியத்தில் இருந்து 40 சதவீதத்தை அபராதமாக வழங்கிட ஐ.சி.சி. அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அத்தோடு, டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலிலும் 2 புள்ளிகளை இந்திய அணி இழக்கும் எனவும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.




## விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் பிரிவு காலிறுதி ஒன்ஸ் ஜபீர், தட்ஜனா மரியா அரையிறுதியில்



கிராண்ட்ஸ்லாம் விம்பிள்டன் டென்னிஸ்தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் செக் குடியரசின் மேரி பவுஸ்கோவா, துனீசியாவின் ஒன்ஸ் ஜபீரை எதிர்கொண்டிருந்தார். இந்தப் போட்டியில் 3-6, 6-1, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற ஒன்ஸ் ஜபீர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 97 ஆவது இடம் வகிக்கும் ஜெர்மனியின் ஜுலி நீமையர், சக நாட்டு வீராங்கனை தட்ஜனா மரியாவுடன் மோதினார். இதில் தட்ஜனா மரியா 4-6, 6-2, 7-5 என்ற நேர் செட்டில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

## விம்பிள்டன் டென்னிஸ் தொடர் ஆடவர் பிரிவு ஜோகோவிச், நூரி அரையிறுதிக்கு முன்னேறினர்



லண்டனில் நடந்துவரும் விம்பிள்டன் டென்னிஸ் ஐதடாரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான காலிறுதிச் சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இத்தாலியின் ஜானிக் சின்னருடன் மோதினார். அந்தப் போட்டியில் முதல் இரு செட்களை 7-5, 6-2 என சின்னர் கைப்பற்றினார். இதையடுத்து சுதாரித்துக் கொண்ட ஜோகோவிச் அதிரடியாக ஆடி 6-3, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் அடுத்த 3 செட்களையும் வென்றார். இதன்மூலம் ஜோகோவிச் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி சுற்று ஆட்டத்தில் பெல்ஜியத்தின் டேவிட் கோபின், அமெரிக்காவின் கமரூன் நூரியைச் சந்தித்திருந்தார். இந்தப் போட்டியில் இருவரும் தலா 2 செட்களைக் கைப்பற்றினர். வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதி செட்டை நூரி கைப்பற்றினார். 3-6, 7-5, 2-6, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் வென்ற நூரி அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் நூரி ஜோகோவிச்சை எதிர்கொள்ளவிருக்கிறார்.

# ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணியின் சாதனையை முறியடித்தது இந்திய அணி

இந்திய மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களின் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 173 ஓட்டங்களை எடுத்திருந்தது. காஞ்சனா 46 ஓட்டங்களைப் பெற்றார். இந்திய அணி தரப்பில் ரேனுகா சிங் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து இந்திய மகளிர் அணி களமிறங்கியது. ஆரம்ப வீராங்கனைகளாக களமிறங்கிய பாலி வர்மா–மந் தானா ஜோடி ஆட்டமிழக்காது வெற்றியிலக்கை 25.4 ஓவர்களில் அடைந்தது. பாலி வர்மா 71, மந்தனா 94 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்திய பெண்கள் அணி புதிய சாதனையைப் படைத்துள்ளது. விக்கெட் இழப்பின்றி அதிக ஓட்டங்களைச் சேர்த்த ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணியின் சாதனையை இந்திய பெண்கள் அணி முறியடித்துள்ளது.

தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக விக்கெட் இழப்பின்றி 164 ஓட்டங்களை ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி எடுத்ததே இதுவரை சாதனையாக இருந்தது.

அதனை இந்திய மகளிர் அணி முறியடித்துள்ளது. இதற்கு முன்பு 2006 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிராக இந்திய மகளிர் அணி விக்கெட் இழப்பின்றி 146 ஓட்டங்களை எடுத்தமையே இந்திய சாதனையாகவும் இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை மீட்கும் நடவடிக்கைக்கு இந்தியாவே தலைமை தாங்கவேண்டும்!

## சிங்கப்பூர் பல்கலை கலாநிதி கணேசன் விக்னராஜா தெரிவிப்பு



சீனா தர்மசங்கடமான நிலையில் உள்ளதாலும் இலங்கைக்கு உதவுவது தொடர்பாக சர்வதேச சமூகம் தடுமாற்றமான நிலையில் உள்ளதாலும், உத்தேச இலங்கைக்கு உதவிவழங்கும் கூட்டமைப்பிற்கு தலைமை வழங்குவதன் மூலம் கடனில் சிக்கித்தவிக்கும் அண்டை நாட்டை பிணை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்தியா தலைமை தாங்க முடியும் என சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி கணேசன்விக்னராஜா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் உதவி கிடைப்பதற்கு சிறிது காலம் எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான தெரிவுகள் குறைவடைகின்றன எனத் தெரிவித்துள்ள அவர், இலங்கையை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பது இந்தியாவின் நலனிற்கு உகந்த விடயம் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இதன் காரணமாக இந்தியா இலங்கையுடனான தனது வர்த்தக முதலீட்டை ஆழப்படுத்தலாம், தற்போதைய மனிதாபிமான உதவிகளில் இருந்து கடந்து செல்லலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு இந்த வருட ஆரம்பத்திலிருந்து உதவிக்கு விரைந்த நாடு இந்தியா, கடனுதவிகள் நீண்டகால கடன்கள், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற வற்றின் மூலம் இந்தியா 350 கோடி டொலர்களை வழங்கியுள்ளது.

எனினும், இலங்கை எரிபொருளைப் பெற உதவிய இந்தியாவின் கடன் உதவிகள் ஜூன் மாதம் முடிவடைந்துள்ளன - எரிபொருள் கையிருப்பு முடிவடைந்ததால் நாடு முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை ஓரளவு இயல்பான நிலைக்குக் கொண்டுவருவதற்கும் வளர்ச்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் இலங்கைக்கு அடுத்த மூன்று வருடங்களில் 200 முதல் 250 கோடி டொலர் வரை தேவைப்படலாம் என கலாநிதி கணேசன் விக்னராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆழமான தேக்கநிலையில் சிக்குப்படக்கூடும், பொருளாதாரம் வீழ்ச்சியடையும்போது விலைகள் தொடர்ந்து அதிகரிக்கும் பலர் வேலை வாய்ப்பை இழப்பார்கள் மில்லியன் கணக்கானவர்கள் வறுமையில் சிக்குப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது இந்திய பிரதமரின் அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கைக்கு பாரிய வெற்றியாக அமையும் என நான் கருதுகின்றேன் என குறிப்பிட்டுள்ள அவர், இதுவே எந்த நாட்டுக்கும் சமீப காலத்தில் இந்தியா வழங்கியுள்ள பாரிய இருதரப்பு உதவியாகும் எனக் கருதுகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியா இன்னமும் பெரிதாகவேண்டும், இலங்கைக்கு உதவி வழங்கும் கட்டமைப்பிற்கு உதவவேண்டும், சர்வதேச நாணயநிதியம் மற்றும் ஏனைய உலகநாடுகளுடன் இணைந்து அடுத்த மூன்று வருடங்களுக்கு 200 முதல் 250 கோடி டொலர்களை வழங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

உதவி பெறுவது தொடர்பில் இலங்கை மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது. உலகின் 60 வீதமான வறிய நாடுகளும் ஏதோ ஒரு வகையில் கடன் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ள அவர், ஆனால் அந்த நாடுகள் இன்னமும் வங்குரோத்து நிலையை அடையவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.







# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பரமேஸ்வரன் ஆலய கும்பாபிஷேகம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று (புதன்கிழமை) அதிகாலை இடம்பெற்றது.

அதனொரு அங்கமாக எண்ணெய்க்காப்பிடல் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நடந்தது.

ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று 6ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இதற்கான கிரியைகள் அனைத்தும் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் இடம்பெற்றன.

இன்று புதன்கிழமை காலை யாக பூஜையைத் தொடர்ந்து மகா பூர்ணாகுதி இடம்பெற்று பரமேஸ்வரப் பெருமானுக்கு தீபாராதனை, விசே பூஜை இடம்பெற்று, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணங்களுடன் 108 நடன மாணவிகளின் நிருத்தியாஞ்சலியும், கீத வாத்திய உபசாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

தொடர்ந்து அந்தர்பலி, பகிர்பலி என்பன வழங்கப்பட்டதன் பின்னர் பிரதான கும்பங்கள் புறப்பட்டு வீதிப் பிரதட்சிணமாக வந்து காலை 6 மணிமுதல் 7 மணி வரையான மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில் ஸ்தூபி அபிஷேகம், ராஜகோபுர கும்பாபிஷேகம், அனைத்து மூர்த்திகளுக்குமான மகாகும்பாபிஷேகம் என்பன இடம்பெற்றன.

# நடை, சைக்கிள் பேரணியில் விபத்துத் தடுப்பு விழிப்புணர்வு

## மட்டு. சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில்







மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணனின் ஆலோசனையின் கீழ் தொற்றா நோய் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய விபத்து வாரத்தினை முன்னிட்டு சைக்கிள் சவாரியூடாக விழிப்புணர்வுப் பவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

'வீதி ஒழுங்குகளை பின்பற்றி வாகன விபத்துகளை தவிர்ப்போம்', 'வீதியில் செல்லும் பாதசாரிகளை அவதானித்து வாகனங்களைச் செலுத்துவோம்', 'பெற்றோலுக்காக காத்திராது சைக்கிளில் செல்வோம்', 'மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தாது இருப்போம்', 'வீதியில் அவதானமாக செல்வோம் – உறவுகளை காப்பாற்றுவோம்' போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் பதாகைகளுடன் நடைபவனி மட்டக்களப்பு சுகாதார பணிமனையில் இருந்து மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டு கோபுரத்தை கடந்து சென்று போதனா வைத்தியசாலையை அடைந்து, மீண்டும் அங்கிருந்து லேக் வீதி ஊடாக பிராந்திய சுகாதார பணிமனையைச் சென்றடைந்தனர். இந்நிகழ்வின் போது வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.07.2022இல் வெளியிடப்பெற்றது.